DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரேமா | Caste | : | |
| Husband Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **25.02.2026.**

**PW - 19**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் குடியிருக்கிறேன். கோவில் பக்கத்தில் புது ஆற்றங்கரையில் பெட்டிக்கடை வைத்துள்ளேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமியை தெரியும். எனது பெட்டிக்கடையை காலை 05.00 அல்லது 05.15 மணிக்கு திறப்பேன். நான் யாரையும் பார்க்கவில்லை. பெரியசாமி ஆற்றில் குளிக்க போய் காணவில்லை என்று அவரது வீட்டை சேர்ந்தவர்கள் தேடி வந்தார்கள். நான் அப்போது கடையில் இருந்தேன். பெரியசாமி ஆற்றில் இறந்து கிடந்ததாக சொல்லி அவரது வீட்டை சேர்ந்தவர்கள் அவரது பிரேதத்தை தூக்கிவந்தார்கள். அதை பார்த்தேன். அவருக்கு யாருடன் விரோதமென்று தெரியாது. இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தபோது, 19.01.2020 காலை 05.00 மணியளவில் நான் கடையிலிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் மற்றும் இளவர் பாரதிராஜாவும் புள்ளம்பாடி வாய்க்கால் பக்கம் போனார்கள் என்றால் சரியல்ல. அன்று காலை பெரியசாமி வாய்க்காலுக்கு குளிக்க போனதை பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எதிரிகள் மூவரையும் போலிசார் கைது செய்தது பற்றி கேள்விபட்டேன். சம்பவத்தன்று பெரியசாமி குளிக்க போனதையும், பிறகு எதிரிகள் மூவர் மற்றும் இளம் சிறார் ஆகியோரும் மேற்படி பெருவளவாய்க்காலுக்கு போனதை பார்த்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.